# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2334/26 - 2023 මැයි මස 31 වැනි බදාදා - 2023.05.31

*2334/26 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு, கப்பற் சரக்கனுப்புநருக்கு, கலன்செயற்படுத்தாப் பொதுக் காவுநருக்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநருக்கு உரிமமளித்தல் சட்டம்**

*1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு, கப்பற் சரக்கனுப்புநருக்கு, கலன்செயற்படுத்தாப் பொதுக் காவுநருக்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநருக்கு உரிமமளித்தல் சட்டத்தின் 10 ஆம் பிரிவின்கீழ் துறைமுகங்கள் மற்றும் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**நிமல் சிறிபால டி சில்வா,**
துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்.

கொழும்பு,
*2023, மே 30.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2023 ஆம் ஆண்டின் கப்பற்றொழில் முகவர்கள், கப்பற் சரக்கனுப்புநர்கள், கலன்செயற்படுத்தாப் பொதுக் காவுநர் மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர் (கட்டணங்களின் அமைப்புமுறை) பற்றிய ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) கப்பற்றொழில் முகவர், கப்பற் சரக்கனுப்புநர், கலன்செயற்படுத்தாப் பொதுக்காவுநர், கொள்கலன் செயற்படுத்துநர் அல்லது கப்பற்சரக்குத் திரட்டுநர் என்ற தொழிலைக் கொண்டு நடாத்துகின்றவரும் (இதனகத்துப் பின்னர் "உரிமமளிக்கப்பட்ட சேவை வழங்குநர்" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றவருமான) உரிமமளிக்கப்பட்ட கப்பற்றொழில் முகவர், கப்பற் சரக்கனுப்புநர், கலன்செயற்படுத்தாப் பொதுக்காவுநர் மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர் ஒவ்வொருவரும், பண்டங்களின் அனுப்பு பொருட்டொகுதிக்குக் "கப்பற்சரக்குக் கட்டணம் முற்செலுத்தப்பட்டது" அல்லது "கப்பற்சரக்குக் கட்டணம் சேகரிக்கப்படுவதற்குரியது" எனக் குறித்துரைக்கின்ற தெளிவானவோர் ஏற்றுபொருட் பட்டியலை வழங்குதல் வேண்டும்.


1A - G 39618 — 07 (2023/05)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(2) பண்டங்களின் அனுப்பு பொருட்டொகுதி "பூச்சியக் கப்பற்சரக்குக் கட்டணத்தைக்" கொண்டதென்றவாறு ஏற்றுபொருட் பட்டியலெதுவும் குறித்துரைத்தலாகாது.

3. புறப்படும் இடத்திலிருந்து சேரிடம் வரைக்குமான போக்குவரத்து ஆவணத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட பண்டங்களை ஏற்றிச்செல்வதற்கான முழுச்செலவையும் மேவுகின்ற கொள்கலனிலிடப்பட்ட கப்பற் சரக்கின் மீதான எல்லாக் கட்டணங்களும், ஏற்று பொருட்பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட எல்லாமடங்கிய கப்பற் சரக்குக் கட்டணத்துடன் சேர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவை, அவற்றைச் செலுத்துவதற்கு ஒப்பந்த ரீதியில் பிணிக்கப்பட்டவராகவுள்ள திறத்தவரிடமிருந்து மட்டுமே அறவிடப்படுதலும் வேண்டும்.

4. உரிமமளிக்கப்பட்ட சேவை வழங்குநரினால் விதிக்கப்பட்ட கட்டணங்களின் அமைப்பு முறை தொடர்பான ஒவ்வோர் ஒப்பந்தமும் இவ்வொழுங்குவிதிகளுக்கு அமைந்ததாகவிருத்தல் வேண்டுமெனபதுடன், ஒப்பந்தத்தினது பிரதியொன்றும் வேறெவையேனும் இயைபான ஆவணங்களும், தேவைப்பட்டவிடத்து வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

5. உரிமமளிக்கப்பட்ட சேவை வழங்குநர் எவரும், ஏற்றுபொருட் பட்டியலில் அல்லது கப்பற் சரக்கனுப்புநரின் கப்பற் சரக்குப் பற்றுச்சீட்டில் 3 ஆவது ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறு புறப்படும் இடத்திலிருந்து சேரிடம் வரைக்கும் பண்டங்களை ஏற்றிச் செல்வதற்கான எல்லாமடங்கிய கப்பற் சரக்குக் கட்டணம் தவிர்ந்த வேறு ஏதேனும் கட்டணத்தை இலங்கையிலுள்ள இறக்குமதியாளர் ஒருவரிடமிருந்து இறுத்தலாகாது:

ஆயின், உரிமமளிக்கப்பட்ட எவரேனும் சேவை வழங்குநர், இலங்கை ரூபாக்களில் செலுத்தப்படற்பாலதாக இருக்க வேண்டியதான ஒப்படைப்புக் கட்டளைக் கட்டணமொன்றை இறக்குமதியாளரிடமிருந்து இறுக்கலாம்.

6. (1) உரிமமளிக்கப்பட்ட சேவை வழங்குநரொருவரினால் ஒப்படைப்புக் கட்டளைக் கட்டணமொன்று இறுக்கப்படுகின்றவிடத்து, அவ்வாறு இறுக்கப்பட்ட ஒப்படைப்புக் கட்டளைக் கட்டணத் தொகையானது, பதிவு நோக்கங்களுக்காக, (இதனகத்துப் பின்னர் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அத்தகைய சேவை வழங்குநரினால் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(2) உரிமமளிக்கப்பட்ட எவரேனும் சேவை வழங்குநர் ஒப்படைப்புக் கட்டளைக் கட்டணத் தொகையை அதிகரிப்பதற்கு உட்கருதினால், அத்தகைய அதிகரிப்பை ஆதாரப்படுத்துகின்ற ஆவண முறையான சான்றுடன் சேர்த்து அதன் சார்பிலான விண்ணப்பமொன்று பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, ஆதாரப்படுத்துகின்ற ஆவணங்களைச் சரிபார்த்ததன்மேல் -

(அ) ஒப்படைப்புக் கட்டளைக் கட்டணத்தின் உத்தேசிக்கப்பட்ட அதிகரிப்பை ஏற்றுக்கொள்ளலாம்;

(ஆ) ஒப்படைப்புக் கட்டளைக் கட்டணத்தின் உத்தேசிக்கப்பட்ட மீளாய்வை நிராகரிக்கலாம்; அல்லது

(இ) நியாயமானதென அவர் கருதுகின்ற ஒப்படைப்புக் கட்டளைக் கட்டணத்தின் மாற்று அதிகரிப்பொன்றை முன்மொழியலாம்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதியின் முடிவு, அதற்காகக் குறித்தளிக்கப்பட்ட காரணங்களுடன், (2) ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட விண்ணப்பம் பெறப்பட்ட திகதியிலிருந்து நாற்பத்தைந்து வேலை நாட்களினுள் இயைபான உரிமமளிக்கப்பட்ட சேவை வழங்குநருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

7. உரிமமளிக்கப்பட்ட சேவை வழங்குநர் எவரும், ஏற்றுபொருட் பட்டியலில் அல்லது கப்பற் சரக்கனுப்புநரின் கப்பற் சரக்குப் பற்றுச்சீட்டில் குறித்துரைக்கப்பட்டவாறு புறப்படும் இடத்திலிருந்து சேரிடம் வரைக்கும் பண்டங்களை ஏற்றிச் செல்வதற்காக 3 ஆம் ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்பட்டவாறாக எல்லாமடங்கிய கப்பற் சரக்குக் கட்டணம் தவிர்ந்த வேறு ஏதேனும் கட்டணத்தை இலங்கையிலுள்ள ஏற்றுமதியாளர் ஒருவரிடமிருந்து இறுத்தலாகாது.

8. மேவப்பட்ட ஒவ்வோர் உரிமமளிக்கப்பட்ட சேவை வழங்குநரும், 1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு, கப்பற் சரக்கனுப்புநருக்கு, கலன்செயற்படுத்தாப் பொதுக் காவுநருக்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநருக்கு உரிமமளித்தல் சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அத்தகைய பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

9. (அ) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறாகச் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் ஆவணத்தில் அடங்கி யுள்ள எவையேனும் தகவல்கள் அல்லது விபரங்கள் பிழையானவையாக அல்லது போலியானவையாகக் காணப்படுமிடத்து, அல்லது

(ஆ) உரிமமளிக்கப்பட்ட எவரேனும் சேவை வழங்குநர் இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறுமிடத்து,

பணிப்பாளர் தலைமையதிபதி, விசாரணையொன்றின் பின்னர், அத்தகைய கம்பெனிக்கு வழங்கப்பட்ட உரிமத்தை இடைநிறுத்துவதற்கான அல்லது இல்லாதாக்குவதற்கான நடபடிகளை எடுக்கலாம் அல்லது அத்தகைய கம்பெனிக்கு அளிக்கப்பட்ட எவையேனும் சிறப்புரிமைகளை மீளப்பெறலாம் அல்லது அவற்றின் பயன்பாட்டை இடைநிறுத்தலாம்.

10. இவ்வொழுங்குவிதிகளின் ஏதேனும் ஏற்பாட்டை மீறிச் செயலாற்றுகின்ற அல்லது அவரது அறிவுக்கெட்டியவரை போலியானவையாக அல்லது பிழையானவையாக உள்ள எவையேனும் விபரங்களைக் கொண்ட எவையேனும் தகவல்களை அல்லது விளக்கத்தைக் கொடுத்துதவுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

11. இவ்வொழுங்குவிதிகளில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய-

“எல்லாமடங்கிய கப்பற் சரக்குக் கட்டணம்” என்பது, பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) முழுக் கொள்கலச் சுமையின் மீதான கட்டணங்கள்;

(ஆ) முடிவிடக் கையாளுகைக் கட்டணங்கள்;

(இ) ஏற்றுபொருட் பட்டியலை அல்லது கப்பற் சரக்கனுப்புநரின் கப்பற் சரக்குப் பற்றுச்சீட்டை வழங்குவதற்கான கட்டணங்கள்; அத்துடன்

(ஈ) கொள்கலச் சுமைக்குக் குறைவான கப்பற் சரக்கின் மீதான கட்டணங்கள் (ஏற்புடையதாயின்); அத்துடன்

“புறப்படும் இடத்திலிருந்து சேரிடம் வரைக்கும்” என்பது,-

(அ) கொள்கல முற்றத்திலிருந்து கொள்கல முற்றத்துக்கு;

(ஆ) கொள்கலக் கப்பற் சரக்கு நிலையத்திலிருந்து கொள்கலக் கப்பற் சரக்கு நிலையத்துக்கு;

(இ) கொள்கல முற்றத்திலிருந்து கொள்கலக் கப்பற் சரக்கு நிலையத்துக்கு;

(ஈ) கொள்கலக் கப்பற் சரக்கு நிலையத்திலிருந்து கொள்கல முற்றத்துக்கு,

பண்டங்களை ஏற்றிச் செல்லுதல் என்று பொருளாகும்.

EOG 05-0277

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.